
பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 13 புதன்கிழமை 30.10.2024 | அதிர்வு 90

## அர்ச்சுனாவுக்கு பிடியாணை!



(மன்னார் நிருபர்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு மன்னார் 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







### கொங்கிறீட் கற்களால் தலையில் தாக்கி

# கணவன், மனைவி கொடூரக் கொலை!

### பருத்தித்துறையில் பயங்கரம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் - புனிதநகர் பகுதியில் கணவன், மனைவி ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 02 ▶

# தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றிணையவில்லை; ஆசனங்களைப் பெறுவதே அவர்களின் நோக்கம்

### வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விசனம்



(கி.வசந்தன்)

தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றிணையாமல் ஆசனங்களைப் பெறுவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர் என்று வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அந்தச் சங்கத்தினரால் வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் இன்றுஆர்ப்பாட்டம்ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர். 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**கணவன், மனைவி...**

இரண்டு பிள்ளைகளின் பெற்றோரான மேற்படி இருவரும் கொங்கிறீட் கற்களால் தலையில் தாக்கப்பட்டுக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது 54), அவரது மனைவியான சுப்பிரமணியம் மேரி றீட்டா (வயது 53) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வீட்டுக்கு இன்று காலை அயலவர்கள் சென்று பார்த்தபோது இருவரும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸ் பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதன்பின்னர் பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து சடலங்களைப் பார்வையிட்ட பின்னர், குறித்த சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்று தெரிவித்த பருத்தித்துறை பொலிஸார், சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

**தமிழ் அரசியல்வாதிகள்...**

அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"இம்முறை தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் வேட்பாளர்கள் பேரம் பேசக்கூடிய ஒரு சக்தியாக மக்களின் நன்மை கருதி ஒன்றிணையவில்லை. ஆசனங்களைப் பெறுவதனை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக தனித்தனியாக தேர்தலில் நிற்கின்றனர். இப்படி நின்று யாருக்காக நீங்கள் கதைக்கப் போகின்றீர்கள்.

நீங்கள் ஒரு அணியாக எப்போதாவது திரண்டிருக்கிறீர்களா? உங்களுக்குள்ளேயே போட்டியிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி கட்சிகளைப் பிளவுபடுத்தி தமிழ்த் தேசியத்தையே இன்று இல்லாது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஒன்றிணைத்து கலந்துரையாடி ஒற்றுமையாக எப்போது பயணித்துள்ளீர்கள்? இந்தத் தேர்தலில் அதிகரித்துள்ள சின்னங்களால் தமிழ் மக்கள் குழப்ப நிலை அடைந்துள்ளனர். சங்கு, வீடு, சைக்கிள் என்று பல கட்சிகள். பல சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன.

இதனால் அரசியலைப் பற்றியே தெரியாதவர்கள் எல்லாம் நாடாளுமன்றம் செல்லக்கூடிய நிலைமையே இன்று ஏற்பட்டுள்ளது. வடக்கில் (யாழ்ப்பாணம் வன்னி) 12 ஆசனங்களைப் பெறுவதற்காக 800 இற்கும் மேற்பட்டவர்கள் களம் இறங்கியுள்ளனர். இவர்களுக்கு யார் வாக்களிப்பது? நண்பர்கள் உறவினர்கள் வாக்களித்தால் அந்த வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது.

இதன் மூலம் சிங்களக் கட்சிகளே ஆசனங்களைக் கைப்பற்றும் நிலைமையை நீங்களே உருவாக்கப் பார்க்கின்றீர்கள். பணத்தை ஏன் இவ்வாறு வீணடிக்கின்றீர்கள்? அதனை மக்களுக்கு வழங்குங்கள். நீங்கள் மாற்றத்தை உருவாக்குவோம் என்று கூறிவிட்டு இன்னும் கீழ் நிலைக்கே மக்களைத் தள்ளப்போகின்றீர்கள்." - என்றனர்.

---

**அர்ச்சுனாவுக்கு...**

நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மன்னார் வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காகப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த வைத்தியர் அர்ச்சுனா, மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு இன்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வைத்தியர் அர்ச்சுனா மன்றில் முன்னிலையாக நிலையில் மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்தல் தொடர்பான கலந்துரையாடல்





**(பிரபாகரன் டிலக்சன்)**

பலாலி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டு அண்மையில் விவசாய நடவடிக்கைகாக விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்தல் தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்ட அரச அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பளை பிரதேச செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர், வலி. வடக்கு பிரதேச சபையின் செயலாளர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராணுவ உயர் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர்.

விடுவிக்கப்பட்ட விவசாய காணிகளுக்குச் செல்லும் பாதைகள் பற்றைக் காடாகக் காணப்படுகின்றமையல் காணிகளுக்கான பாதைகள் பிரதேச சபையால் துப்புரவு செய்யப்பட்டு வழங்கப்படும் எனவும், அதன் பின்பு பொதுமக்களின் காணிகள் மாவட்ட செயலத்தால் துப்பரவு செய்யப்பட்டு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மீளளிக்கப்படுகின்ற விவசாய காணிகளுக்குள் மக்கள் சென்று விவசாயத்தில் ஈடுபடக்கூடிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அதன்படி மின்சார வசதிகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரின் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு




(எஸ்.நிதர்ஷன்)

சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கூட்டணியின் வேட்பாளர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், குருசுவாமி சுரேந்திரன், சி.வேந்தன், பா.கஜதீபன், சசிகலா ரவிராஜ் உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.





# மட்டு. ஆரையம்பதில் சூரியன் சின்னத்தின் சுவரொட்டிகளை ஒட்டிய இருவர் சிக்கினர்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, ஆரையம்பதி பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளரின் தேர்தல் பிரச்சாரச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் இருவர் துண்டுப் பிரசுரங்களுடன் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் சட்டத்தை மீறி ஆரையம்பதி பிரதான வீதியிலுள்ள சுவர்களில் இன்று அதிகாலை 4 மணிக்கு மேற்படி இருவரும் சுவரெட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் காத்தான்குடிப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.



# தமிழ்த் தேசிய இனத்தின் அடையாளமாக தமிழர் கூட்டணி மாற்றம் பெற வேண்டும்

## அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவிப்பு!

(பழுவூரான்)

எமது கட்சியானது தமிழ் இனத்துக்கு ஒரு அடையாளச் சின்னமாக மாற வேண்டும். சூரியன் உதிக்க வேண்டிய தேவை உள்ளது என்று மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

புதிய அரசுடன் இணக்கப்பாட்டு அரசியலுடன் பயணிக்கும் போதுதான் நமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நினைக்கு அதேவேளை அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களின் பிரச்சி



னைகளை தீர்த்துக் கொடுக்க முடியாத நிலைமைகளும் ஏற்படுவதுண்டு.

அரசு சொல்லுவது எல்லாம் ஏற்றுக் கொள்ளும் நிலைமை எமது அரசியல் தலைமைகளுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் உரிமைக்காக குரல் கொடுக்கிறோம் என்று கூறிய வர்கள் மக்களின் தேவைகளை புறக் கணித்து வந்துள்ளார்கள்.

நாங்கள் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்க வேண்டிய காலத்தின் கட்டா யத்தில் இருக்கின்றோம்.

மக்களைப் பாதிக்கும் விடயங்களை அரசுக்கு எடுத்துக் கூற வேண்டிய வர்களாகவும் அதேவேளை, மக்களின் தேவைகள் என்று வரும்போது அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு ஆதரவு கொடுப்பவர்களாகவும் இருபோம்.

அமைச்சர்களால் தான் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் மாற வேண்டும்.

இடம்பெறவுள்ள இந்த நாடாளு மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட் டத்தில் எமது சின்னமான சூரியன் உதிக்க வேண்டிய தேவை உள்ளது.

எமது கட்சிக்கு மக்கள் ஆதரவு தர வேண்டும். நாங்கள் ஒரு மாற்றுச் சக்தியாக உருவெடுப்பதற்கு எமது கட்சியானது தமிழ்த் தேசிய இனத்துக்கு ஒரு அடையாளச் சின்னமாக மாற வேண்டும். என்றார்.

# புலனாய்வு ஆணைக்குழுவின் பணிகள் மாகாண ரீதியில் விஸ்தரிப்புச் செய்யப்படும்

## ஐ.ம.ச. வேட்பாளர் இம்ரான் மகரூப்

(ஹஸ்பர்)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் போது லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக புலனாய்வு செய் வதற்கான ஆணைக்குழுவின் பணிகள் விஸ்தரிக்கப்படும் என்று திருகோண மலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி தலைமை வேட்பாளர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்

திங்கட்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித் ததாவது,



கொழும்பில் அமைந்துள்ள லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு பொது மக்கள் அதிகளவில் முறைப் பாடுகள் செய்து வருகின்றனர்.

இந்த வருடம் முதல் 9 மாத காலப் பகுதியில் மட்டும் சுமார் 3 ஆயிரம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

எனினும் இந்த ஆணைக்குழுவின் தற்போதைய ஆளணி மற்றும் வசதிகள் குறைவு காரணமாக விசாரணைகளைத் துரிதப்படுத்த முடியாதுள்ளது. அதிக தாமதங்கள் ஏற்படுகின்றன. சில விசார ணைகள் இரண்டு, மூன்று வருடங்கள் வரை செல்வதாகத் தெரிய வருகின்றது. இதனால் ஊழலை விரைவாகக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் இந்த ஆணைக்குழுவின் பணிகளை விரைவு படுத்தும் பொருட்டு மாகாண மட்ட அலுவலகங்களை தாபிக்க நடவடிக்கை எடுப்போம். இதற்கு தேவையான சட்டத் திருத்தங்களை முன்னெடுப்போம். இதன்படி மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாணங்களிலும் மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்படும்.

இதன்மூலம் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து துரிதமாக விசாரணைகளை மேற் கொண்டு சம்பந்தப்பட்டோருக்கு எதிராக துரிதமாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். பொதுமக்கள் எதிர்பார்க்கும் ஊழலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவு படுத்தமுடி யும்.

எனவே, நாட்டில் ஊழலைக்கட்டுப் படுத்தும் கொள்கையை முன்னெடுத்து வரும் சஜித் பிரேமதாஸ தலைமையி லான ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்.- என்றார்

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் முறைமை மாற்றம்

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகள் நாட்டின் தேர்தல் முறைமை தொடர்பில் மீண்டும் வாதப் பிரதிவாதங்களை உருவாக்கி இருக்கின்றன.

எண்பதுகளில் தொகுதிவாரி அல்லது வட்டார வாரி தேர்தல் முறைமையில் இருந்து வெளியே வந்த நாடு விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

அது பொருத்தமற்றது என்று தெரிவித்து தொகுதிவாரி முறைமையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையும் கலந்த ஒரு முறைமையை முதலில் உள்ளூராட்சி சபைகளுக்கு 2017 கொண்டு வந்தனர். ஆனால் அந்த முறைமை தொடர் குழப்பங்களுக்கு காரணமாக இருந்து வருவது கண்கூடாக இருக்கிறது.

இந்த முறைமையின் கீழ் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் எந்த ஒரு தரப்பும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையில் அதனால் தொங்கு சபைகள் உருவாகின்ற சூழலும் தாராளமாகி இருக்கின்றது. அதன் காரணமாக உள்ளூராட்சி சபைகளில் வழமையான - இயைபான - இயக்கமும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பது அனுபவப் பாடமாகியுள்ளது.

கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி தென்னிலங்கையில் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர்.

எதிர்பார்த்தபடி தனித்து அக்கட்சி அதிக வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் தனித்து ஆட்சி அமைப்பதில் அத்தரப்பு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

30 உறுப்பினர்களைக் கொண்ட எல்பிட்டிய பிரதேச சபையில் 15 உறுப்பினர்கள்தான் ஆளும் தரப்புக்கு. எதிர்த் தரப்பில் 15 பேர் உள்ளனர். இரண்டு பக்கமும் இழுபறியான ஒரு நிலை உருவாகி இருக்கின்றது. அதிக ஆசனங்களை கைப்பற்றிய கட்சி என்ற முறையில் தேசிய மக்கள் சக்தி பிரதேச சபைத் தலைவர் பதவியையும் நிர்வாகத்தையும் ஏற்றுக் கொண்டாலும் கூட சபையின் நாளாந்த கடமைகளை முன்னெடுப்பதற்கான தனிப் பெரும் பான்மை அத்தரப்புக்கு இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட சீர்திருத்தத்தின் பின்னர் தெரிவான பல சபைகளின் நிலைமை இதுதான்.

அதிக வாக்குகளை பெறுகின்ற கட்சி அதிக ஆசனங்களைப் பெற முடியாத சிக்கலின் காரணமாக எப்போதும் தொங்கு சபைகளே உருவாகின்ற நிலைமை காணப்படுகின்றது. அதனால் தேர்தலின் பின்னர் அடிக்கடி பிரதேச சபைத் தலைவர்கள் அல்லது மேயர்கள், நகர பிதாக்கள் மாறுகின்ற நிலைமையும், வருடாந்த வரவு - செலவுத் திட்டங்களை நிறைவேற்ற முடியாத குழப்பங்கள் ஏற்படும் சூழலும் தொடர்கின்றது.

கடந்த வருடம் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல்கள், இப்போதைய பொதுத் தேர்தல் முடிந்த கையோடு நடைபெற இருக்கின்றன. அதுவும் கூட இதே தேர்தல் முறைமையின் கீழ் நடக்கும் என்பதால் அந்தத் தேர்தலின் பின்னர் வருகின்ற உள்ளூராட்சி சபைகள் பெரும்பாலும் தொங்கு சபைகளாகவே இருக்கப்போகின்றன. எந்தத் தரப்பிடம் ஆட்சி என்பது பற்றிய குழப்பமான நிலை பல சபைகளில் நீடிக்கலாம்.

இத்தகைய இழுபறி நிலை அல்லது குழப்பச் சூழல் உள்ளூராட்சி நிர்வாக முறைமை தொடர்பில் மக்களின் நம்பிக்கை தன்மையை இழக்க வைக்கும் ஆபத்தும் உண்டு.

ஆக உள்ளூராட்சி தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டியது அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.

நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை, தேர்தல் சட்டத்தை மறுசீரமைப்பதற்காக ஒத்திவைக்காமல் ஒருபுறம் அதை நடத்திக் கொண்டு மறுபுறம் தேர்தல் சீர்திருத்தத்தை விரைந்து கொண்டு வருவதற்கான வேலைகளையும் செய்தாக வேண்டும்.

உச்ச ஜனநாயகப் பண்பியல்புகளுக்கு அமைய மக்கள் பிரதிநிதித்துவ முறைமை கைக்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், உள்ளூராட்சி சபைகளின் வழமையான பங்கு பணிகள், செயற்பாடுகள் தடையின்றி நடைபெறுவதற்கான ஒரு பிரதிநிதித்துவ முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவது முக்கியமாகும்.

கலப்பு தேர்தல் முறைமை என்ற பெயரில் மீண்டும் சாத்தியப்பாடு இல்லாத முறைமைகளை கொண்டு வருவதைத் தவிர்த்து, நேர்சீரான தேர்தல் முறைமை திட்டம் ஒன்றை எல்லா அரசியல் தரப்புகளும் சேர்ந்து கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.




# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அதிக ஆசனங்களை கைப்பற்றும்

## வேட்பாளர் சித்தார்தன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று (30) புதன்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் வேட்பாளருமான பா.கஜதீபன் மற்றும் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், முன்னாள் பிரதேசபை உபதவிசாளர் செ. மயூரன் உள்ளிட்டவர்கள் இந்த பரப்புரையில் கலந்து கொண்டார்கள்.

இதன்போது கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தன்,

வடக்கு, கிழக்கு எங்கும் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு பாரிய அளவான மக்கள் ஆதரவு கிடைத்துள்ளது.

இந்தத் தேர்தலிலே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வடக்கு, கிழக்கில் அதிகளவான ஆசனங்களை கைப்பற்றும். எனவே அனைத்து மக்களும் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின் பால் நிற்கின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கின்றோம்.- என்றார்.

# சிரமதானமும், மரக்கன்று நடலும்


(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் சிரமதானப் பணியும், மர நடுகை நிகழ்வும் இன்று புதன்கிழமை (30) கல்லூரியின் உத்தியோகத்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இதில் கல்லூரியின் அதிபர் ஏ. ஜனூர்டீன், உதவி அதிபர் எம்.எம்.சஹ்பான், பதிவாளர் எம்.ஏ.சி. முஹம்மது றகீப் உள்ளிட்ட கல்லூரியின் விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கமத்தொழில் திணைக்களத்தால் கல்லூரிக்கு வழங்கப்பட்ட நல்லின மாங்கன்றுகளும் கல்லூரி வளாகத்தில் அதிபர் ஏ.ஜனூர்டீனால் நடப்பட்டன. மரக்கன்றுகளைத் தந்துதவிய கமத்தொழில் திணைக்களத்துக்கு கல்லூரி நிர்வாகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டது.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் இல்லை!

## மாற்றுத் திறனாளி வேட்பாளர் சுகத் வசந்த டி. சில்வா

(ஸ்ரீநிவாசகம் ரவீந்திரன்)

இலங்கையில் வாழும் சுமார் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இதுவரை காலமும் நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு அரசும் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களையும் முன்வைக்கவில்லை.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற வேட்பாளரும் இலங்கை மாற்றுத்திறனாளிகளின் சங்கத் தலைவருமான சுகத் வசந்த டி. சில்வா கூறினார்

இலங்கை மாற்றுத்திறனாளிகளின் இரத்தினபுரி மாவட்ட மாநாடு இரத்தினபுரி மாநகர சபையின் பிரதான மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் அனுசரணையில் நடை பெற்ற அந்த மாநாட்டில் அக்கட்சியின் வேட்பாளர்கள் பலரும் உரையாற்றினர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது,

தேசிய மக்கள் சக்தி என்பது ஒரு அரசியல் கட்சியில்லை. அது மக்கள் இயக்கம், அரசியல் இயக்கம். இதனால் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் இந்த இயக்கம் சேவை செய்யும். பல சவால்களுக்கு முகங்கொடுத்த அனுபவம் அக்கட்சிக்கு உள்ளது.

அத்துடன் அக்கட்சிதான் மாற்றுத் திறனாளிகள் குறித்து தனது ஜனாதிபதி தேர்தல் கொள்கை பிரகடனக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் கடந்த 1988 ஆம் ஆண்டு அப்போதைய அரசால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஒன்றின்படி அரச தொழில்வாய்ப்பு வழங்கும் போது 03 சத வீதம் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது முறையாக வழங்கப்படவில்லை. அதனால்தான் இன்று நாட்டி



லுள்ள மாற்றுத்திறனாளிகள் தொழிலற்று பிறரிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளி பட்டதாரிகளில் 71 சத வீதமான பட்டதாரிகளுக்கு இது வரை தொழில்வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அந்தச் சுற்றறிக்கையை அமுல்படுத்தியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

ஐக்கிய நாட்டுச் சபையின் கொள்கை பிரகடனத்தில் கூட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தேவைகள், வாய்ப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் அதனை நடைமுறைப்படுத்தப் படுத்த எந்த அரசும் முன்வரவில்லை.

கடந்த பல வருடங்களாக மாற்றுத் திறளாளிகளுக்கு தலா 5000 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. அதனை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகள் பல திறமைகளை தன்னகத்தே கொண்டுள்ளனர். அவர்களின் திறமைகள் வெளிக்கொணர வேண்டும் அதற்கு ஆட்சி பீடமேறும் அரசுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கொள்கை பிரகடனத்தில் எம்மைப்பற்றி குறிப்பிட்டு எமக்கு தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் தருவதாக உறுதி தெரிவித்ததை தொடர்ந்து நாமும் எமது சங்கமும் அந்த சக்தியுடன் இணைந்து பயணிக்க முடிவு செய்தோம்.

நாமும் இந்நாட்டு பிரஜைகள் எமக்கும் சமூகத்தில் சமமான அந்தஸ்து சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். சமூக அபிவிருத்தியிலும் நாட்டின் முன்னேற்றத்திலும் பங்கேட்க எமக்கு முடியும். அத்துடன் சமூக நீதி சாதாரண மக்களுடன் வாழ வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பு . எனவே நீங்களும் நானும் நாட்டில் சமூகத்தில் நிம்மதியாக சிறந்த முறையில் சம அந்தஸ்துடன் வாழ வேண்டும் என்றால் எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் தாங்களும் தாங்கள் குடும்பத்தினரும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறு நீங்கள் அனைவரும் வாக்களிக்கும் பட்சத்தில் தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பு எனக்கும் கிடைக்கும் அவ்வாறு நான் நாடாளுமன்றம் சென்றால் நான் முதலாவது மாற்றுத்திறனாளி நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பேன்.- என்றார்.

# மக்கள் இளையோருக்கு ஒரு முறை சந்தர்ப்பத்தை வழங்குதல் வேண்டும்

## மன்னார் மாவட்ட வேட்பாளர் றொஜன்



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மக்கள் தற்போது மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். இளைஞர்களும் எனக்குப் பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். எனவே மக்கள் இந்த முறை எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் ஏ. றொஜன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் ஏ.றொஜன் மாவட்டத்தின் பல பாகங்களிலும் தனது தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்தார்.

கிராம மக்கள், இளைஞர் கழகங்கள் ,மாதர் சங்கம், பொது அமைப்புக்களை சந்தித்து தனது தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தார்.

இதன் போது மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தற்போது மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். இளைஞர்களும் எனக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். எனவே மக்கம் இந்த முறை எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி என்னையும் பாராளுமன்றம் அனுப்பி வையுங்கள்.

மக்களின் பிரச்சினைகளை தற்போதுவரை நான் நேரில் சென்று பார்வையிட்டு பல்வேறு உதவிகளை வழங்கி வந்துள்ளேன்.

எனவே மக்களின் பூரண ஒத்துழைப்பு இந்த முறை எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. மக்கள் இம்முறை புதியவர்களுக்கும், இளையோருக்கும் ஒருமுறை தமது சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.- என்றார்.







# கல்முனையில் கட்சி அலுவலகம்!

(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பாக சங்கு சின்னத்தில் இலக்கம் 10 இல் போட்டியிடும் சோ. புஸ்பராஜாவின் தேர்தல் அலுவலகம் செவ்வாய்க்கிழமை (29) மாலை கல்முனை உடையார் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.



ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பங்காளி கட்சிகளான ஈ. பி. ஆர் எல். எப். அம்பாறை முக்கியஸ்தர் புண்ணியநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் சக வேட்பாளரான கி. லிங்கேஸ்வரன் மற்றும் புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர் சங்கரி ஈரோஸ், ஜனநாயக முண்ணனியின் தலைவர் இராஜ இராஜேந்திரன், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நடராசா ஜீவராசா உட்பட ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.





# தம்பலகாமம் பிரதேச சாஹித்திய விழா!

(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச சாகித்தியா விழா நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (30) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் கலந்து கொண்டார்.

இதன் போது தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கலை, கலாசாரம் பாரம்பரியத்தை எடுத்து காட்டி கடந்த காலங்களில் பணியாற்றிய சிரேஷ்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவ மாணவிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன. பரிசில்கள், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கணக்காளர் எஸ்.செல்வதாஸ், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர் கலந்து கொண்டனர்.









# தலவாக்கலையில் களைகட்டும் தீபாவளி!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தீபாவளியை கொண்டாட்டத்தை அடுத்து தலவாக்கலை நகரில் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

வீதியோரங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதிகளில் மக்கள் அலை அலையென திரண்டு பொருள்களை கொள்வனவு செய்வதை காணமுடிந்தது.



# தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கவே தமிழ் தேசிய கூட்டமைப்பாக இங்கு போட்டி

## முன்னாள் எம்.பி. சண்முகம் குகதாசன்

(ஹஸ்பர்)

தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவே தமிழ் தேசிய கூட்டமைப்பாக இங்கு இணைந்து போட்டியிடுகிறோம் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் முதன்மை வேட்பாளரும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் நேற்று (29) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடகிழக்கு மாகாணங்களில் மற்ற இடங்களில் இவ்வாறின்றி திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி ரெலோ, புளட் என இணைந்து போட்டியிடுகிறோம். இதன் மூலம் மக்கள் மத்தியில் வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்க பல விழிப்புணர்வு களையும் மேற்கொண்டு வருகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க அதிகாரம் தேவை. இலங்கை தமிழ் அரசு கட்சி இந்த உரிமைகளுக்காக பல போராட்டங்களை எழுபது வருடங்களாக போராடி வருகிறது. தந்தை செல்வா தமிழர்களின் பாரம்பரியம் கலாசார பண்பாடுகளை பாதுகாக்க இந்தக் கட்சியை உருவாக்கினார்.

அந்தளவுக்கு தமிழ் தேசியத்தை பாதுகாக்கவே தமிழ் அரசு கட்சி தோற்றம் பெற்றது. அதிகளவான வாக்குகளை அளிப்பதன் மூலம் எமது பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும். அண்ணளவாக ஐம்பதாயிரம் பேர்கள் வாக்குகளை மக்கள் வழங்க வேண்டும். நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தால் மக்களது உரிமைகள் பாதிக்கப்படும். தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டவும் இருப்பையும் பாதுகாக்க தமிழ் பிரதிநிதித்துவம் தேவை.- என்றார்.




குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# விஜய் தெளிவான பாதையில் செல்லவில்லை; மத்திய அமைச்சர் எல்.முருகன் விமர்சனம்

தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை, கோட்பாடுகள் நடிகர் விஜய் தெளிவான பாதையில் செல்லாததையே காட்டுகிறது என்று மத்திய அமைச்சர் எல்.முருகன் விமர்சனம் செய்துள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு துறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 'ரோஜ்கர் மேளா' என்ற பெயரில் பணி நியமன ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை பெரம்பூரில் நேற்று நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் எல்.முருகன் கலந்துகொண்டு பணி நியமன ஆணைகளை வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மத்திய அரசு துறைகளில் 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்ற பிரதமர் மோடி வாக்குறுதி அளித்தார். அதன்படி, தற்போது வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. புதிய கட்சி தொடங்கியுள்ள விஜய் அவரது கட்சிக் கொள்கை, கோட்பாடுகளில் குழப்பான நிலையில்தான் இருக்கிறார். தேசமும் தெய்வீகமும் எனது இரண்டு கண்கள் என சொல்லியிருந்தால் வரவேற்றிருப்போம். திராவிடம் – தமிழ் தேசியம், இருமொழிக் கொள்கை எனவும் சொல்லியிருக்கிறார். இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாக இருக்கின்றன. இருப்பினும், அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது செயல்பாடுகள் போகப் போகத்தான் தெரியும். அவரது கொள்கை, கோட்பாடுகள் தெளிவான பாதையை அவர் தேர்ந்தெடுக்கவில்லை என்பதையும் தெளிவான பாதையில் பயணிக்க விரும்பவில்லை என்பதையுமே காட்டுகிறது. தி.மு.க, போலி திராவிட மொடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் போலி திராவிட மாடல் ஆட்சியை அதிகமாக தாக்கியிருக்கிறார். குடும்ப அரசியல் பற்றியும் பேசியுள்ளார்.

குடும்ப அரசியல் நம் நாட்டிற்கு நல்லதல்ல. ஆட்சி, அதிகாரத்தில் பகிர்வு பற்றி விஜய் பேசியுள்ளார். அந்த கொள்கையை பா.ஜ.க. ஏற்கனவே பின்பற்றி, முன் உதாரணமாகத் திகழ்கிறது. வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலும், பிரதமர் மோடி ஆட்சிக் காலத்திலும் ஆட்சி, அதிகாரத்தில் கூட்டணிக் கட்சிகளுக்கு பங்கு கொடுக்கப்படுகிறது.

பட்டாசு வெடிப்பதற்கு தடை விதித்து மக்களின் உணர்வுகளோடு தமிழக அரசு விளையாடக்கூடாது. நரகாசுரனை அழித்ததையே தீபாவளி திருநாளாகக் கொண்டாடுகிறோம். அதுபோல தி.மு.க. என்கிற நரகாசுரனை விரைவில் ஒழிக்கப் போகிறோம். அனைத்து பண்டிகைகளுக்கும் முதல்வர் வாழ்த்து சொல்ல வேண்டியது அவரது கடமை. அதை தமிழக முதல்வர் செய்ய வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்."– என்றார்.



# கங்குவா – எடிட்டர் நிஷாத் திடீர் மரணம்

## திரையுலகினர் அதிர்ச்சி

'கங்குவா' எடிட்டர் நிஷாத் யூசுஃபின் திடீர் மரணத்தால் திரையுலகினர் அதிர்ச்சியில் இருக்கிறார்கள்.

மலையாளத்தில் 'தள்ளுமாலா', 'உண்டா', 'ஒன்' உள்ளிட்ட பல்வேறு படங்களுக்கு எடிட்டராக பணிபுரிந்தவர் நிஷாத் யூசுஃப். தற்போது தயாராகி வரும் மோகன்லால் மற்றும் மம்முட்டி படங்களுக்கு எடிட்டராக பணிபுரிந்து வருகிறார். 2022 ஆம் ஆண்டு 'தள்ளுமாலா' படத்துக்காக கேரள அரசின் சிறந்த எடிட்டருக்கான விருதினை வென்றவர் என்பது நினைவுக் கூரத்தக்கது.

தமிழில் சிவா இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள 'கங்குவா' படத்தின் எடிட்டர் நிஷாத் யூசுஃப் தான். இவர் கொச்சி பனம்பில்லி நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இன்று அதிகாலை 2 மணிக்கு காலமாகி உள்ளார். எப்படி மரணம் ஏற்பட்டது உள்ளிட்ட விவரங்கள் இனிதான் தெரியவரும். இவருக்கு வயது 43 ஆகிறது.

திடீரென்று ஏற்பட்ட நிஷாத் யூசுஃப்பின் மரணம் மலையாளத் திரையுலகினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது. இவர் எடிட்டராக பணிபுரிந்துள்ள பெரிய படம் என்றால் அது 'கங்குவா' தான். அப்படம் நவம்பர் 14 ஆம் திகதி வெளியாகவுள்ளது. அதற்கு முன்னதாகவே நிஷாத் யூசுஃப்புக்கு மரணம் ஏற்பட்டுள்ளது.

'கங்குவா' படத்துக்கு பிறகு ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ள 'சூர்யா 45' படத்துக்கும் எடிட்டராக நிஷாந்த் யூசுஃப் தான் பணிபுரிய இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல் லாஹியா நகரில் 93 பேர் உயிரிழப்பு

வடக்கு காசாவில் உள்ள பெய்ட் லாஹியா நகரில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 93 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், பலர் காணாமல் போயுள்ளதாக ஹமாஸ் அமைப்பினரின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், 5 மாடிகளைக் கொண்ட குடியிருப்பு தொகுதி ஒன்றின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்த தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் ஜபாலியா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.





# இந்தோனேசியாவில் ஐபோன் 16 இற்கு தடை



ஐபோன் -16 மொடல் கையடக்கத் தொலைபேசிகளைப் விற்பனை செய்ய இந்தோனேசிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

மேலும் அதனைப் பயன்படுத்துவதும் சட்ட விரோதமானது எனஅந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்த நாட்டின் முதலீட்டுக் கொள்கையை ஆப்பிள் நிறுவனம் ஏற்காததால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்நாட்டு மக்கள் வெளிநாடுகளிலிருந்து ஐபோன் -16 ஐ கொள்வனவு செய்து பயன்படுத்தக்கூடாது எனவும் அந்நாட்டுத் தொழில்துறை அமைச்சர் கர்தசஸ்மிதா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வடக்கு காசாவில் நடந்த மோதலில் நான்கு இஸ்ரேலிய வீரர்கள் பலி!

வடக்கு காசா பகுதியில் நேற்று நடந்த சண்டையின் போது நான்கு இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் ஒரு அதிகாரி படுகாயமடைந்தார் என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அறிவித்தன.

வடக்கு காசாவில் சமீபத்திய இஸ்ரேலிய படைத்துறை தாக்குதலின் மையமாக இருந்த ஜபாலியா பகுதியில் நடந்த சண்டையில் இவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் எந்த விவரங்களையும் இஸ்ரேல் வழங்கவில்லை வழங்கவில்லை. அத்துடன் சம்பவத்தின் சூழ்நிலைகளை இன்னும் ஆராய்ந்து வருவதாகக் கூறியது.

காசாவில் ஹமாஸுக்கு எதிரான தரைவழித் தாக்குதலில் இஸ்ரேலின் பலி எண்ணிக்கை 367 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, இந்த மாத தொடக்கத்தில் வடக்கு காசா பகுதியில் நடந்த சண்டையின் போது காயமடைந்த ஒரு அதிகாரி உயிரிழந்துள்ளார் என திங்கள் கிழமை இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



பக்கங்கள் 03

கனடா முரசு

புதன்கிழமை 30/10/2024

## வாகன அபகரிப்பை தடுக்க விசேட திட்டம்

கனடாவில் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்று வரும் வாகன அபகரிப்பு சம்பவங்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

கனடிய மத்திய போக்கு 02




# 2 மாதங்களுக்குள் 100 மில்லியன் டொலர் செலுத்துமாறு கூகுளுக்கு கனடா உத்தரவு

## வழங்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றப் பணிப்பு

**உலகின் முதல் நிலை தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான கூகுள் நிறுவனம் 100 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டும் என கனடிய வானொலி தொலைக்காட்சி மற்றும் தொலைதொடர்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

**60 நாட்களுக்குள் நூறு மில்லியன் டொலர்களை செலுத்தினால் கனடிய இணைய செய்தி சட்டத்திலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு விலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

கூகுள் நிறுவனம் கடந்த ஆண்டு 100 மில்லியன் டொலர்களை ஆண்டுக்கு செலுத்துவதாக உறுதியளித்திருந்தது.

செய்தி பிரசுரிப்பாளர்களுக்கு இந்தத் தொகையை செலுத்த கூகுள் இணங்கி இருந்தது. இந்த நிதி கனடிய செய்தி நிறுவ னங்களுக்கிடையில் பகிர்ந்து அளிக்கப்பட உள்ளது.

# நேர மாற்றத்தினால் உடலுக்கு அபாயங்கள்

நேரமாற்றம் ஆபத்தானது உலகின் பல்வேறு நாடுகளில் பருவ கால மாற்றத்திற்கு ஏற்ற வகையில் நேர மாற்றங்கள் அறிமுகம் செய்யப்படுவது வழமையானது.

அநேக சந்தர்ப்பங்களில் பகல் நேரத்தை சேமிக்கும் வகையில் இவ்வாறு நேரமாற்றம் அறிமுகம் செய்யப்படுகின்றது.

எவ்வாறு எனினும் இந்த நேர மாற்றங்கள் மனித உடலுக்கு ஆபத்தானது என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர்.

நேர மாற்றத்தின் போது குறிப்பிட்ட நேரத்திலிருந்து முன் நோக்கியோ அல்லது பின்னோக்கியோ நேரம் நகர்த்தப்படுகின்றது.



நாடுகளின் தேவைக்கு ஏற்றவாறு பொதுவாக ஒரு மணித்தியாலம் முன்னோக்கியோ அல்லது பின்னோக்கியோ நகர்த்தப்படுகின்றது.

இவ்வாறு நேரமாற்றம் அறிமுகம் செய்யப்படுவதனால் மக்கள் பாதிக்கப்படுவதாக பிரித்தானிய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவின் நித்திரை சார் ஆய்வு நிறுவனத்தின் ஆய்வாளர்கள் இந்த விடயம் தொடர்பில் ஆய்வு நடத்தியுள்ளனர்.

இவ்வாறு நேர மாற்றம் மேற்கொள்ளப்படுவதனால் மக்கள் தங்களது நித்திரை முறையில் மாற்றத்தை எதிர் நோக்க நேரிடுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

இது பல்வேறு ஆரோக்கிய கேடுகளை உருவாக்கும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.








## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரத்து அமைச்சர் இது தொடர்பான திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.


மத்திய அரசாங்கம் மாகாண மற்றும் பிராந்திய அரசாங்கங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் வாகன அபகரிப்பை தடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் இந்த விடயத்தை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

பொதுவாக மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களுக்கு இடையில் காணப்படும் சில சட்ட இடைவெளிகளை பயன்படுத்தி குற்றவாளிகள் வாகனங்களை அபகரித்து அவற்றை விற்பனை செய்வதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

எனவே இந்த விடயத்தில் மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



# சிறுவனுக்கு சிகிச்சை வழங்கும் நோக்கில் இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகள் ஏலம்

உலகின் முதல் நிலை இசை கலைஞர்களில் ஒருவரான டெய்லர் ஷிப்டின் இசை நிகழ்ச்சி டிக்கெட்டுகள் இரண்டு ஏலத்தில் விற்பனை செய்யப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் அரிய வகையிலான நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவ னுக்கு சிகிச்சை வழங்கும் நோக்கில் இவ்வாறு இசை நிகழ்ச்சிக்கான டிக் கெட் விற்பனை செய்யப்படுகின்றது.

7 வயதான ஜக் என்ற சிறுவன் அறிய வகை நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

மொத்த சனத் தொகையில் 0.01 வீதமான மக்களே இந்த நோயினால் பாதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப் படுகிறது.

இந்த நோய்க்காரணமாக அந்த சிறுவன் கட்டம் கட்டமாக உடல் பாகங்கள் செயலிழக்க நேரிடும் என அவரது தாயார் தெரிவிக்கின்றார்.

அவரது முள்ளந்தண்டு மூளை நரம் புகள் என்பன செயலிழிக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது. இந்த நோய்க்கு பூரணமாக சிகிச்சை அளிக்கக்கூடிய சிகிச்சை முறைமைகள் எதுவும் கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிறுவனுக்கு உதவும் நோக் கில் பல்வேறு தரப்பினரும் நிதி திரட்டி வழங்கி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக பிரபல பாடகி டெய்லர் ஷிப்டின் இசை நிகழ்ச்சிக்கான இரண்டு டிக்கெட்டுகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஆய்வுகளுக்காகவும் நிதி திரட்டப்படு வதாக தெரிவிக்கப்படுகிறது.




# இராஜதந்திரிகள் வெளியேற்றப்பட்டதால் பொதுமக்களுக்கு ஆபத்து குறைவு

## கனடிய பொலிஸ்மா அதிபர் கருத்து

இந்திய இராஜதந்திரிகள் தொடர் பில் கனடிய பொலிஸ் மா அதிபர் சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கனடிய பொலிஸ்மா அதிபர் மைக் டுஹிம் இந்த கருத்தை வெளியிட் டுள்ளார்.

அண்மையில் கனடாவில் கடமை யாற்றி வந்த ஆறு இந்திய இராஜதந் திரிகள் நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு இந்திய இராஜதந்திரிகள் நாடு கடத்தப்பட்டதனை தொடர்ந்து பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச் சுறுத்தல் ஏற்படும் சாத்தியங்கள் குறைந்துள்ளது என அவர் தெரிவித் துள்ளார் அச்சுறுத்தல்கள் வெகுவாக குறைந்துள்ளது என தம்மால் உறு திப்படுத்த முடியும் என அவர் தெரி வித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த இராஜதந்திரிகளை நாடு கடத்தியதன் பின்னர் தெற்காசிய சமூகங்களுக்கு இருந்த அச்சுறுத்தல் குறைந்துள்ளது.

கனடாவில் கடமையாற்றி வந்த இந்திய இராஜதந்திரிகள் சிலர் மறைமுகமாக பாரதூரமான குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டிருந் ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக படுகொலைகள், கப்பம் கோரல்கள் போன்ற சம்பவங்களுடன் இவர்கள் தொடர்பு பட்டிருந்தனர் என கனடிய அரசாங்கமும் பொலிஸாரும் குற்றம் சுமத்தி இருந்தமை குறிப்பிடத் தக்கது.